காலை வழிபாட்டுக் கூட்ட செயல்பாடுகள்

**தமிழ் வருடம் விளம்பி, மாதம் ஆவணி 22ஆம் நாள்**

**ஆங்கில மாதம் செப்டம்பர் 7ம் நாள், 2018, வெள்ளி கிழமை**

**இன்றைய குறள்**

விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே
பசும்புல் தலைகாண்பு அரிது

**பொருள்**

மேகத்திலிருந்து மழைத்துளி விழாது போனால், பசும்புல்லின் நுனியைக்கூட இங்கே காண்பது அரிதாகிவிடும்

**பொன் மொழி**

இன்றைய இலட்சியம் நாளைய சாதனை, இன்றைய அலட்சியம் நாளைய சோதனை

**இரண்டொழுக்கப் பண்பாடு**

1. நான் பயிலும் பள்ளியினையும், வகுப்பறையினையும் எப்போதும் சுத்தமாக வைத்துக்கொள்வேன்.
2. எல்லோரையும் மதித்து நடப்பேன்

**பழமொழி**

A guilty conscience needs no Accuser

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்

**பொது அறிவு**

1. இரு குவிய கண்ணாடியை உருவாக்கியவர் - பெஞ்சமின் பிராங்ளின்
2. வேறிநாய்கடிக்கு மருந்து கண்டறிந்தவர் - லூயி பாய்ஸ்டியர்

## தகவல் சுரங்கம்

யுனெஸ்கோ, 1965 செப். 8ம் தேதியை, உலக எழுத்தறிவு நாளாகப் பிரகடனம் செய்தது. இத்தினம் அனைத்து நாடுகளிலும், 1966 முதல் கடைபிடிக்கப்படுகிறது. மக்களுக்கும், சமூகத்துக்கும் எழுத்தறிவின் முக்கியத்துவத்தை அறிய வைப்பது இதன் நோக்கம். எழுத்தறிவில் முதலிடம் கேரளா என்று இருந்த காலம் மாறி விட்டது. தற்போது திரிபுரா முன்னணியில் உள்ளது. திரிபுராவின் எழுத்தறிவு விகிதம் 94.65 சதவீதம். கேரளாவின் எழுத்தறிவு சதவீதம் 93.91. கோல்கட்டாவை தலைமையிடமாகக் கொண்ட இந்தியப் புள்ளியியல் நிறுவனம், எழுத்தறிவு விகிதத்தை கணக்கிடுகிறது.

**07.09.2018**

**இன்றைய முக்கிய செய்திகள்**

1. அடுத்த கல்வியாண்டு முதல், CBSE பள்ளி மாணவர்களுக்கு, 10 - 15 சதவீத பாடத் திட்டங்கள் குறைக்கப்படும்," என, மத்திய மனிதவள மேம்பாட்டுதுறை அமைச்சர், பிரகாஷ் ஜாவடேகர் தெரிவித்து உள்ளார்.
2. "விண்வெளிக்கு மனிதர்களை அனுப்பும், இஸ்ரோவின், 'ககன்யான்' திட்டத்துக்கு, பிரான்ஸ் விண்வெளி ஆராய்ச்சி மையம் உதவி செய்யும்," என, அந்த நாட்டின், விண்வெளி ஆய்வு மைய தலைவர், ஜீன் வேஸ் லீ கால் கூறினார்.
3. குட்கா' ஊழல் வழக்கில், 'குடோன்' உரிமையாளர்கள் மாதவ ராவ், உமாசங்கர் குப்தா உள்பட, ஐந்து பேரை, சி.பி.ஐ., அதிகாரிகள், நேற்று கைது செய்தனர்.
4. தமிழகத்தில், இரண்டு நாட்களுக்கு கன மழை இருக்காது' என, வானிலை ஆய்வு மையம் அறிவித்து உள்ளது.
5. நேற்றைய விலையை காட்டிலும் இன்று பெட்ரோல் 1 லிட்டருக்கு 51 காசுகளும், டீசல் 56 காசுகளும் உயர்த்தப்பட்டுள்ளது.